சிறப்புக்கூட்டம்

வெள்ளகோவில் நகராட்சியின் சிறப்புக்கூட்டம் 2023-ம் ஆண்டு ஸ்ரீசோபகிருது வருடம் ஏப்ரல் மாதம் **21.04.2023**–ம் தேதி வெள்ளிக்கிழமை காலை **11.00** மணிக்கு நகர்மன்றக் கூட்ட அறையில் நடைபெறும். அது சமயம் கீழ்காணும் பொருள் குறித்து முடிவு செய்ய குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானம் **: 380 / 2023**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளவும் குப்பைகள் உருவாகும் இடங்களிலேயே மக்கும் குப்பை மக்காத குப்பை என தனித்தனியாக தரம் பிரித்து சேகரம் செய்து மறு சுழற்சி செய்யும் இடத்திற்கு கொண்டு செல்லவும் வெளிக்கொணர்வு மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 278 / 2023, நாள். 24.01.2023 அனுமதிக்கப்பட்டதன்படி, 27.03.2023–ல் நடைபெற்ற ஒப்பந்தபுள்ளியில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததராரின் பெயர் | டன் ஒன்றுக்கு ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s. SR, Enterprises,<br>11, Mullai Street,<br>Annamalai Nagar,<br>Trichy-620001. | 5698 | 0.77 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக |
| 2 | Our Land Engineering Works Pvt.LTD,<br>70/1, 1st floor,<br>Anjugam Nagar 3rd Street,<br>Jaffarkhanpet,<br>Chennai – 600 083. | 5727 | 0.26 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த M/s. SR, Enterprises,Trichy நிறுவனத்திற்கு ஏற்பு கடிதம் கோரப்பட்டதில் மேற்படி நிறுவனத்தார் ஏற்பு கடிதம் சமர்ப்பித்து கூடுதல் வைப்புத்தொகை செலுத்தி உள்ளதால் M/s. SR. Enterprises, Trichy நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.**1333 / 2021 /** எச்1)

தீர்மானம் – குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க அனுமதிக்கப்படுகிறது.

(ஒப்பம்) மு. கனியரசி
நகர்மன்றத்தலைவர்
வெள்ளகோவில் நகராட்சி

/ உண்மை நகல் /

21/4/23

ஆணையாளர்
வெள்ளகோவில் நகராட்சி

21.4.23